**தி/தி/புனித மரியாள் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**மூன்றாம் தவணைப் பரீட்சை– 2022**
**கத்தோலிக்க திருமறை**

**தரம் - 06** **நேரம் - 1 $^{1}/_{2}$ மணி**
**சுட்டெண் - ………………**

## பகுதி – I

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. சீனாய் மலையின் உச்சியில் இறைவன் யாரிடம் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார்?
   i. மோசேயிடம் ii. தாவீதிடம் iii. யோசேப்பிடம் iv. ஆபிரகாமிடம்

2. இயேசு கிறிஸ்து தம் திருத்தூதரிடம் ஒப்படைத்த தூதுப்பணியை தொடர்ந்து ஆற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளம்
   i. திருமுழுக்கு ii. குருத்துவம் iii. திருமணம் iv. உறுதிபூசுதல்

3. A – உடற்சுகம்
   B – நிலைவாழ்வைப் பெறுவதற்கான ஆயத்தம்
   மேல்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய அருளடையாளம்
   i. ஒப்புரவு ii. நோயில்பூசுதல் iii. திருமுழுக்கு iv. தேவநற்கருணை

4. அன்னை மரியாவின் அமல உற்பவத் திருநாள் எப்போது கொண்டாடப்படுகின்றது?
   i. மார்கழி 08 ii. தை 01 iii. மார்கழி 25 iv. ஆவணி 15

5. இறைத் தந்தையுடன் உரையாடுவதற்காக இயேசுவால் கற்றுத்தரப்பட்ட செபம்
   i. பரலோக மந்திரம் ii. மூவேளைச் செபம் iii. திருமணித்தியாலம் iv. செபமாலை

6. “இதோ ஆண்டவரின் அடிமை, உம் வார்த்தைப்படியே எனக்காகக் கடவது”. இக் கூற்றுடன் தொடர்புடையவர்
   i. புனித லூக்கா ii. மோசே iii. மரியாள் iv. ஸ்தேவான்

7. பொய்த் தெய்வங்களை வழிபட மறுத்த இளைஞர்களை அரசன் என்ன செய்தான்?
   i. நாடு கடத்தினான் ii. சிரச்சேதம் செய்தான்
   iii. தீச்சூளையுள் எறிந்தான் iv. சிலுவையில்அறைந்தான்.

8. இயேசுவைப் போல பிறரை அன்பு செய்து கல்லால் எறிந்து கொல்லப்பட்டவர்
   i. புனித பேதுரு ii. புனித பவுல் iii. புனித ஸ்தேவான் iv. புனித மத்தேயு

9. ஆழமான இறையியல் கருத்துக்களைக் கொண்ட யோவான் நற்செய்தியின் அடையாளம்
   i. மனித முகம் ii. எருது iii. கழுகு iv. சிங்கம்

10. குணமளிக்கும் அருளடையாங்களைக் கொண்ட தொகுதி
    i. ஒப்புரவு, நோயில்பூசுதல் ii. திருமுழுக்கு, தேவநற்கருணை
    iii. உறுதிபூசுதல், குருத்துவம் iv. திருமணம், ஒப்புரவு

( 10x2= 20 புள்ளிகள்)

**(II) இணைக்குக.**

| | |
|---|---|
| 1. இயேசுவைப் பெறுதல் | பெத்தலகேம் |
| 2. பத்துக் கட்டளைகள் | தை 01 |
| 3. கன்னிமரியாவின் திருவிழா | தொடக்க நூல் |
| 4. இயேசுவின் பிறப்பு | மோசே |
| 5. படைப்பை விபரிப்பது | தேவ நற்கருணை |

(5x1= 5 புள்ளிகள்)

**(III) சரியாயின் (√ ) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. திருவிவிலியத்தின் இறுதி நூல் திருவெளிப்பாடு ஆகும். (…………)
2. கபிரியேல் வானதூதர் மரியாவுக்கு மங்கள வார்த்தை கூறினார். (………)
3. பத்துக் கட்டளைகளை நாம் கடைப்பிடிக்கத் தேவையில்லை. (………..)
4. லூர்து நகரில் பேர்னதெத் என்ற சிறுமிக்கு மரியன்னை காட்சியளித்தார்.(……..)
5. நாம் திருச்சபையின் கட்டளைகளை பின்பற்றத் தேவையில்லை. (………)

(5x1= 5 புள்ளிகள்)

**(IV) பொருத்தமான சொல்லை இட்டு இடைவெளியை நிரப்புக.**

1. ………………………. ஒரு வைத்தியர் ஆவார்.
2. புனிதர்களில் ……………………..மேன்மையான மதிப்பளிக்கப்படுகின்றது.
3. “ ஓய்வு நாளைத் …………………………. கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.
4. உங்கள் ………………….. மன்னியுங்கள்.
5. பணிவாழ்வின் அருளடையாளங்கள் ……………….., …………………. என்பனவாகும்.

( குருத்துவம், தூய்மையாக, புனித மத்தேயு, புனித லூக்கா, அன்னை மரியாவுக்கு, பகைவரை, திருமணம்.)

(5x2= 10 புள்ளிகள்)

## பகுதி – II

**(I) சுருக்கமான விடை எழுதுக.**

1. இயேசுவைப் போல பிறரை அன்பு செய்து வாழ்ந்த இருவரைப் பெயரிடுக.
2. திருச்சபையின் கட்டளைகள் ஐந்தினை எழுதுக.
3. கத்தோலிக்கர்களுக்குள்ள மாமிசத் தவிர்ப்பு நாட்கள் மூன்றைக் குறிப்பிடுக.
4. திருமுழுக்கின் போது பயன்படுத்தப்படுகின்ற அடையாளங்கள் மூன்றை எழுதுக.
5. பெரிய குறிப்பிடம் 285 இல் குறிப்பிடப்பட்டுள்ள செபத்தின் நான்கு வகைகளும் எவை?
6. பரிசேயரும், வரிதண்டுபவரும் உவமையிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
7. இயேசு செபித்த சந்தர்ப்பங்கள் மூன்றை எழுதுக.
8. நீர் உம் வாழ்வில் தினமும் செபிக்கும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.

(8x5= 40 புள்ளிகள்)

**(II) ஏதேனும் நான்கு தலைப்பினைத் தெரிவு செய்து ஒவ்வொன்றுக்கும் இரண்டு வாக்கியங்கள் விதம் எழுதுக.**

1. இயேசு கற்பித்த செபம்
2. பாத்திமா நகரில் மரியன்னைகயின் காட்சி
3. தியானம் செய்வதன் அவசியம்
4. ஒரு சந்தி
5. திருச்சபையின் கட்டளைகள்.

(4x5= 20 புள்ளிகள்)